## சூழல் தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்திட்டம் - 2022

சூழல் தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2016 செப்தெம்பர் 05 ஆம் திகதிய 5792–எல்கே ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் II(பீ)(3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டக் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வன வளப் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் என்பன செயற்திட்டத்தின் அமுல்ப்படுத்தல் முகவர்களாக உள்ளன. பாதுகாப்பு மற்றும் சமுதாய நன்மைகளிற்காக இலங்கையில் தெரிவுசெய்யப்பட்ட இடங்களிலுள்ள சூழல் தொகுதி முகாமைத்துவத்தை முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். ஆரம்ப நில அளவை திட்டமிடல் மற்றும் முகாமைத்துவம், இயற்கை வளங்களின் நிலைபேறான பயன்பாடு மற்றும் மனிதன் – யானை சகவாழ்வு, பாதுகாக்கப்பட்ட பிரதேச முகாமைத்துவம் மற்றும் நிறுவகரீதியான இயலளவு மற்றும் செயற்திட்ட முகாமைத்துவம் போன்ற பெயர்களிலான நான்கு பிரதான கூறுகளின் கீழ் செயற்திட்ட நடவடிக்கைகள் அமுல்ப்படுத்தப்படுகின்றன. கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 9,675 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 45 மில்லியனானதுடன் முழுத் தொகையும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2016 திசெம்பர் 01 இல் தொடங்கியிருந்ததுடன் 2022 யூன் 30 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. எனினும் செயற்திட்ட நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்படும் திகதி 2023 மே 30 வரை நீடிக்கப்பட்டிருந்ததுடன் மொத்த செயற்திட்ட செலவானது ரூபா 7,630 மில்லியனுக்கு சமனான ஐ.அ.டொலர் 35 ஆக காணப்பட்டது.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் அட்டவணை 2.1 இல் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது செலவினக் கூற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்கீட்டு குறைபாடுகள் | தொகை ரூபா | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டினுள் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் மற்றும் புத்துருவாகும் பணிகளுக்காக முறையே ரூபா 255,849,644 மற்றும் ரூபா 865,194,268 செலவிடப்பட்டிருந்த போதிலும், முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தாக காசு வெளிப்பாய்ச்சலானது பேரேட்டுக் கணக்குகளின் முறையே ரூபா 827,539,405 மற்றும் ரூபா 275,714,065 தொகையான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகளை சீராக்கியமையின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | 1,121,043,912 | இதற்கு முன்னர் உரிய நிதியாண்டின் மற்றும் அதற்கு முன்னைய கணக்காண்டின் வேறுபாட்டினை சீராக்குவதன் மூலம் காசுப்பாய்சச்ல் பெறப்பட்டிருந்தது. எனினும், தற்போது அதற்குரிய சீராக்கங்கள் உரிய முறையில் மேற்கொள்ளப்பட்டு காசுப்பாய்ச்சல் பெறப்பட்டுள்ளது. | காசு வெளிப்பாய்ச்சல் சரியாக இனங்காணப்பட வேண்டும். |
| (ஆ) | குறிப்புகளில் ரூபா 278,756,951 பெறுமதியாக சொத்துக்கள்அகற்றப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், ஆதனங்கள், பொறிகள் மற்றும உபகரணங்களில் எந்த அகற்றலும் இடம்பெற்றிருக்கவில்லை. எனினும், குறித்த பெறுமதி ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களில் சீராக்கம் செய்யப்படாத காரணத்தால் அதன் தாக்கம் அவதானிக்கப்படவில்லை. | 278,756,951 | இந்த பிரச்சினையை நிவர்த்தி செய்வதற்கும் திருத்துவதற்கும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன, எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் இடம்பெறாதிருக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும். | ஆதனங்கள், பொறிகள் மற்றும உபகரணங்கள் நிதிக்கூற்றுக்களில் சரியாக வெளிப்படுத்தப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பில் ஏனைய அமுலாக்கல் முகவர் நிறுவனத்திற்காக குறிப்பு இலக்கம் 20 இல் உள்ளடக்கப்பட்டுள்ள ஆரம்ப மீதி ரூபா 252,136,086 ஆன போதிலும், நிதி நிலைமைக் கூற்றில் பெறுமதி ரூபா 266,513,092 ஆக காணப்பட்டதுடன், அதற்கமைய வேறுபாடு ரூபா 14,337,007 அவதானிக்கப்பட்டது. | 14,337,007 | கணக்கீட்டு முறையில் ஆரம்ப மீதிகளில் காணப்பட்ட தவறுகள் இனங்காணப்பட்டுள்ளதுடன், அதனை திருத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. | ஆரம்ப மீதிகள் சரியாக இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (ஈ) | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பில் ஏனைய அமுலாக்கல் முகவர் நிறுவனத்திற்காக புத்துருவாகும் வேலையிலிருந்து ரூபா 351,571,703 தொகை மாற்றப்பட்டிருந்த போதிலும், அது ரூபா 348,158,269 இற்கு மூலதனமாக்கப்பட்டிருந்த காரணத்தால் ரூபா 3,413,434 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | 3,413,434 | ஏனைை அமுலாக்கல் நிறுவனங்களின் குறிப்பு இலக்கம் 22 இலிருந்து 20 வரை ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களை நடைமுறை வேலைக்கு மாற்றுதல் குறைவாக இனங்காணப்பட்டுள்ளதுடன், அதனை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நடைமுறை வேலை மற்றும் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |

**2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| செயற்திட்ட செயற்பாட்டு கையேட்டின் 4.2.5 ஆம் பந்தி | நிலையான சொத்துக்கள் மெய்மையாய்வு வருடாந்தம் நடாத்தப்பட வேண்டிய போதிலும் வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் மற்றும் வன பாதுகாப்பு திணைக்களம் என்பவற்றால் பயன்படுத்தப்படும் சூழல் தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்திட்டத்தின் (ESCAMP) சொத்துக்கள் தொடர்பில் அதற்கிணங்க செயற்பட்டிருக்கவில்லை. | சொத்து மெய்மையாய்வு திணைக்களங்களால் மேற்கொள்ளப்படுகிறது. | நிலையான சொத்துக்கள் மெய்மையாய்வு வருடாந்தம் மேற்கொள்ளப்பட்டு சொத்துக்களின் நிலவுகை உறுதிப்படுத்தப்பட வேண்டும். |

3. பௌதீக செயலாற்றல்

3.1 செயற்திட்ட பணிகளை நிறைவேற்றுவதிலான தாமதங்கள்

| | செயற்பாடு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டினுள் வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் ஊடாக மொணராகல மாவட்டத்தின் ரத்துகல பிரதேசத்தில் 105 குடும்ப அலகுகளின் வாழ்க்கைத்தரத்தினை மேம்படுத்துவதற்காக ரூபா 0.72 மில்லியன் ஒதுக்கீட்டின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட ஐந்து நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டதுடன், மற்றுமொரு நடவடிக்கை ரூபா 232.93 மிலலியன் ஒதுக்கீட்டின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. ஒன்பது பணிகளை நிறைவேற்ற முடியாதிருந்தது. மேலும், உடவளவ தேசிய பூங்காவின ஊடாக குடும்பமொன்றுக்கு 80 பேர்ச் வெற்றிலை பயிரிடுவதற்கான வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 0.770 மில்லியன் செலவினத்தில் 14 குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட வெற்றிலை கன்றுகளும் நோய்க்குள்ளாகி அறுவடையை பெற்றுக்கொள்ள முடியாதவாறு அழிவடைந்திருந்தது. | வேடுவத் தலைவரின் விருப்பமின்மை மற்றும் வலயக் கல்வி அலுவலகத்திலிருந்து பரிந்துரைகளை பெற்றுக்கொள்ள முடியாமை ஆகியன இந்த விலகளுக்கு காரணமாக அமைந்திருந்தது. | செயற்திட்ட நோக்கங்கள் அடையப்பட வேண்டும். |
| (ஆ) | வனசீவராசிகள் திணைக்களத்தினால் பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களின் பாதுகாப்பு மற்றும் பேணல் என்பதன் கீழ் ரூபா 61.5 மில்லியன் நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் நடைமுறைப்படத்த திட்டமிடப்பட்ட ஏழு நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம் மீளாய்வாண்டின் போது 32 சதவீதத்திற்கம் 65 சதவீதத்திற்கும் இடைப்பட்டதாக காணப்பட்டதுடன், பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களை அண்மித்ததாக சூழலுக்கு இசைவான சுற்றுலா வியாபாரமொன்றை நிறுவுததலும் ஆகும். ரூபா 10 மில்லியன் நிதியேற்பாட்டின் அடிப்படையீல் மேற்கொள்ளப்பட்ட இரு நிர்மாணப் பணிகளின் பௌதீக செயன்முன்னேற்றம் 40 சதவீதமாகவும் காணப்பட்டது. | நிலவும் எரிபொருள் நெருக்கடி மற்றும் கட்டுமானப் பொருட்களின் விலை அதிகரிப்பு காரணமாக சிங்கராஜா மற்றும் நக்கல்ஸ் மலைகளின் நிர்மாணப் பணிகள் நிறுத்தப்பட்ட போதிலும், திட்ட அமலாக்கப் பிரிவு அந்த நிர்மாணங்களை திட்ட காலத்திற்குள் முடிக்க தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. | செயற்திட்ட நோக்கங்கள் அடையப்பட வேண்டும். |
| (இ) | வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் வா பாதுகாப்பு திணைக்களத்தின் நிறுவனத் திறனை மேம்படுத்தும் வகையில், திட்ட முகாமைத்துவ பிரிவினால் நடைமுறைப்படுத்தப்பட்ட 06 திட்டங்களில் ரூபா 1,913 மில்லியன் ஆரம்ப மதிப்பீட்டுடனான இதன் நோக்கம் | நிலவும் பொருளாதார நெருக்கடி, மூலப்பொருட்களின் விலை அதிகரிப்பு மற்றும் மூலப்பொருட்களின் பற்றாக்குறை போன்ற காரணங்களால் | உரிய காலப்பகுதியினுள் செயற்திட்ட நொக்கங்கள் அடையப்பட வெண்டும். |

| | |
|---|---|
| இடைநிறுத்தப்பட்டு 2023 ஆம் ஆண்டின் போது புதிய செயற்திட்டமாக ரூபா 1,738 மில்லியனால் குறைக்கப்பட்டது. புதிய ஒப்பந்ததாரர் மே 31 அன்று முடிக்க நியமிக்கப்பட்டார். அதன்படி, விடயப்பரப்பினை மட்டுப்படுத்தி மீண்டும் சாட்டுதல் அடிப்படையில் கையளிக்கப்பட்ட செயற்திட்டத்தின் கிரயம் ரூபா 415.07 மில்லியனாகவும் மொத்த கிரயம் ரூபா 2,153.07 மில்லியனாகவும் காணப்பட்டதுடன், கிரயம் மதிப்பீட்டை விட அதிகமாக உள்ளமை அவதானிக்கப்பட்டது. | ஒப்பந்ததாரர்கள் திட்டங்களை கைவிட்டுவிட்டுள்ளதுடன், இதன் காரணமாக வனசீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சின் அறிவுரைகளுக்கு இணங்க செயற்திட்ட அமுலாக்கல் குழுவினால் குறித்த செயற்திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டிருந்தது. |

**3.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| செயற்பாடு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் 30 உத்தியோகத்தர்களுக்கு கொழும்பு பல்கலைக்கழகத்தின் மூலம் நடாத்தப்பட்ட இலங்கை தகைமைகள் வழிகாட்டல் கோவை (SLQF) **3** ஆம் மட்டத்திற்கு உரிய வனசீவராசிகள் முகாமைத்துவம் தொடர்பிலான டிப்ளோமா பாடநெறியில் **2017/2018** தொகுதிக்கு அளவிடப்பட்ட பாடநெறி கட்டணம் ரூபா.**3,300,000** ஆனபோதிலும், **2019/2020** தொகுதிக்கு அதனை விட ரூபா **11,700,000** கூடுதலாக ரூபா **15,000,000** ஆன கட்டணம் அறவிடப்பட்டிருந்ததுடன் இந்த பாடநெறிக்காக செலவிடப்பட்ட மொத்த தொகை ரூபா **38,819,579** ஆனமையால் ஒரு உத்தியோகத்திற்கு செலவிடப்பட்ட தொகை ரூபாய் **1,293,333** ஆக காணப்பட்டது. அந்த பல்கலைக்கழகத்தின் மூலம் நடத்தப்பட்ட SLQF **8** பிரிவின் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பாடநெறியில் மாணவர் ஒருவருக்கான கட்டணம் ரூபா **250,000** ஆக காணப்பட்டமையும், கொழும்பு பல்கலைக்கழகத்தினை தெரிவு செய்யும் போது உலக வங்கியின் செயற்பாட்டு வழிகாட்டல் பின்பற்றப்பட்டிராமையும், பல்கலைக்கழகத்திற்கு செலுத்திய ரூபா **21,590,108** தொகைக்கான பற்றுச்சீட்டுகளின் மூலப்பிரதிகள் மற்றும் ரூபா **12,785,500** தொகையான முற்பணத்தை தீர்ப்பதற்குரிய உறுதிச் சீட்டுக்களின் மூலப்பிரதிகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமை போன்ற விடயங்களில் காரணமாக இதனை சிக்கனமான நடவடிக்கையாக அவதானிக்க முடியாது இருந்தது. | திட்டமிட்டபடி கிரிதலையில் அமைந்துள்ள வன சீவராசிகள் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையத்தில் பாடநெறியை நடாத்துவதற்கு முடியாது இருந்த காரணத்தால் எதிர்பாராத செலவினங்களை மேற்கொள்ள நேரிட்டமையும், கள உத்தியோகத்தர்களுக்கு இயலுமை அபிவிருத்திக்கான பெரும்பாலான கற்கைகள் இலங்கை முழுவதும் அமைந்துள்ள பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களை அண்மித்ததாக மேற்கொள்ள வேண்டியதாக இருந்த காரணத்தால் இந்த பாடநெறிக்கு அதிக கிரயம் மேற்கொள்ள நேரிட்டது. | வெளிநாட்டு கடன் உதவியின் கீழ் மேற்கொள்ளப்பட்ட குறித்த பணிகள் சிக்கனமாகவும் செயற்திறனாகவும் மேற்கொள்ளப்பட வேண்டும். |